உ

கடவுள் துணை.

திருச்செந்தூர்

ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள்பேரில்

# மாதப்பதிகமும்

திருப்பழணிவடிவேலர்பேரில்

## வாரப்பதிகமும்.

அடங்கியிருக்கின்றன



ஸ்ரீலட்சுமீநாராயணவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1892.

உ



திருச்செந்தூர்.

சிவசுப்பிரமணியக்கடவுள்பேரில்பதிகம்.

சித்திரைமாதம்.

நித்திரைதன்னிலும் பாதாரவிந்த நிதந்தொழுவே
ன் உத்திரஞ் சொல்லென்றுபோற்றி நிற்பேனுமையா
ள்மகனே சத்துருசங்காரவேலையு முன்னைந்தான்மறவே
ன் சித்திரைமாதம் வருவேன் திருச்செந்தி லாதிபனே.

## வையாசிமாதம்.

ஒய்யாரமான மயின்மீதிலேறி உகந்தெனக்கு
ஐயாவரங்கொடுத் தருள்புரிவாயரி மான்மருகா
மெய்யாறுவாயு முகமாறுமுன்னைக் கண்டுதொழ
வையாசிமாதம் வருவேன்செந்தூரினில்வாழ்பவனே

## ஆனிமாதம்

வானிலுலகை யளந்தோன்மருகா வடிவேல்முருகா
மேனிமெலிந்து வாடிவனே வினை தீருமென்று
கானிலந்தன்னி லிருந்தேயென்னாளும் நடந்தபடி
ஆனிப்பிறந்து வருவேன்செந்தூரினி லாண்டவனே

## ஆடிமாதம்

தேடியகாணுமுன் பாதாரவிந்தந் தினந்தொழுவேன்
வாடியிருந்து மயங்குவனே வடிவேல்முருகா
கூடியகொன்றைக் குறமாதையுன்னையுங் கும்பிடநான்
ஆடிப்பிறந்து வருவேன்செந்தூரினில் வாழ்கந்தனே

## ஆவணிமாதம்

பூவணிபூண்ட குறமாதைத்தேடிப்புனத்தருகே
மாவணியேறிவேவந்துநிற்பாய் மதுராபுரியில்
தாவணிதன்னில் நரிதுயபரியென்று தரன்கட்டுஞ்சொ
க்க ஆணிமாதம் வருவேன் செந்தூரினிலாண்டனேவ

### புரட்டாசிமாதம்

திகட்டாதசெங்கனி வாயமுதுண்டு தினைப்புனத்தில்
அருட்டாமலோடி வருகுமாய் அரனார்மகனே, கிரட்டா
ன வள்ளி தெய்வானை யுன்னையும் கிதங்கொழுது, புரட்
டாசிமாதம் வருவேன் செந்தூரினில் புண்ணியனே

### அற்பசிமாதம்

கற்பழியாதகுறமாதைத்தேடிக் கானகத்தில், கொப்பி
லும்நாடி யுகந்துகிற்பாயுமையாள்மகனே, செப்பிலுஞ்
செய்ய மொழியாளையும்மையுஞ் சேவைசெய்ய, அற்ப
சிமாதம் வருவேன் செந்தூரினில்வாழ்கந்தனே

### கார்த்திகைமாதம்

போத்தியநானுன்பாதாரவிந்தம்புகழ்பெறவே
நேத்தியதாக அருள்புரிவாய்நெடியோன்மருகா
சாத்தியமாலையுந்தெய்வானையுன்னையுங் கண்டுதொழக்
கார்த்திகைமாதம்வருவேன் செந்தூரினில்காங்கயனே

### மார்கழிமாதம்

ஆறுகையின்மயின்மீதினிலேறியனுதினமுன்
பேறுறுமாக அருள்புரிவாய்புவியாளவந்த
தாறுகமான குறமாதையுன்னையுந் தான்றொழுக
மார்கழிமாதம்வருவேன் செந்தூரினில்வாழ்கந்தனே

### தைமாதம்

மையாரும் பூங்குழல் மணாளனைத்தேடி வனத்தருகே
ஓய்யாரமாககடந்துவந்தாயுமையாள்மகனே (ன்
மெய்யானதெய்வமென்றேயெண்ணித்தேடிவிரும்பினா
தைமாதந்தோறும் வருவேன்செந்தூரினில்சண்முகனே

### மாசிமாதம்

மாசிபழனிதிருவேங்கடம் கன்னியாகுமரி
தேசிப்பரியென்னுஞ்சேவிக்குஞ் செங்கண்மால்மருகா
பூசியநீறையும் வைவேலையுங்கண்டுபுகழ்பெறநான்
மாசிமாதந்தம் வருவேன் செந்தூரினில்வாழ்பவனே

### பங்குனிமாதம்

சங்குநீராடித்திருப்பாற்கடல்தன்னில்தையல்மா மருகா
எங்குநீராககிறைந்துநிற்பாயென்னைக் காத்தருள்வாய்
கங்குலமானகுறமாதையுன்னையுங் கண்டுதொழ
பங்குனிமாதம்வருவேன் செந்தூரிற் பதிதனிலே

திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமிபேரில்
மாதப்பதிகம்-முற்றிற்று.

உ

கடவுள்துணை.

## சுப்பிரமணியக்கடவுள்பேரில்

## வாரப்பதிகம்.

கலித்துறை.

### ஆதித்தவாரம்

வாதித்தசூரரை வடிவேலெடுத்து வளைந்துகொண்டு
சாதித்துவென்ற தயாபரனே யெந்தன்சஞ்சலத்தைச்
சோதித்துப்பார்த்து துயர்தனைநீக்கிநற்றூகையுடன்
ஆதித்தவாரம்வருவாய்பழனிநல்லாண்டவனே

### சோமவாரம்

உங்கள்தகப்பன் தானிக்காயுலகேழுஞ்சுற்றிக்
கண்கள்சிவந்திடவந்துநின்றுயந்தக்கபடதுபோல்
எங்கதிமேற்குற்றமியாதிருந்தாலுமிரங்கிமனந்
திங்கட்கிழமைவருவாய்பழனிநற்றேசிகனே

### மங்களவாரம்

கொவ்வாயிதழுண்ணும் வள்ளிதெய்வானைக்குகந்தவரா
ன்,தவ்வாயகப்பட்டபாம்பதுபோலுந்தமிழ்மறையோன்
அவ்வாயிற்சிக்கிஅலையப்படாதபடிசொற்கிரங்கி
செவ்வாய்க்கிழமையில்வருவாய் பழனிநற்றேசிகனே

## சௌமியவாரம்

சதமெனும்வேதமுதலெழுத்தோதத்தலையிற்குட்டி
விதமெனக்கேட்டருள் வேலவனேயென் வினையகலப்
பதமதுபாடக்களித் துரைசொல்லவும்பண்புதந்து
புதனெனும்வாரம் வருவாய்பழனிநற்புண்ணியனே

## குருவாரம்

கருவாயெழுந்திரு கைகான்முளைத்துங் கழிந்தபின்பு
உருவாய்ப்பிறம்பித்த வுத்தமனே ஒருவுண்மைதனை
திருவாய் மலர்ந்துமுன் னின்றிடவாய்நற்சேவலுடன்
குருவாரநாளில் வருவாயபழணிநற்குருபரனே

## சுக்கிரவாரம்.

உன்னிற்கருதிகின்றஞ்சலிசொல்வோர்க்குவந்துவந்து
அள்ளிவிபூதியிடுமையனேயடியார்க்கிரங்கி
வள்ளிதெய்வானையுடன் மயிலேறிமனதுகந்து
வெள்ளிக்கிழமைவருவாய்பழணிநல்வேலவனே

## சனிவாரம்

சனியானபாவியிளமையிலேயென்னைதான்றொடுத்தா
ன், இனியாகிலுஞ்சற்றிரங்கிலேயே மனதெப்படியோ
பனிபானதைவந்து கதிரோன்விலக்கிடும் பாவனைபோ
ல், சனிவாரநாளில்வருவாய்பழணிசணமுகனே

வாரப்பதிகம்-முற்றிற்று.